தமிழ் பேசும் மாணவர்களின் தேசிய குரலாய்

# மாணவர் குரல்

குரல் 02
நன்கொடை 30.00 ரூபா
அடிமை வருடம் 2013 ஜீலை 16 – ஆகஸ்ட் 16
திருவள்ளுவர் ஆண்டு 2044 கடகம்(ஆடி) மாதம்



# கல்வி தனியார் மயமாக்கலிற்கு எதிராக மாணவர்கள் போராட்ட களத்தில்

## தடுத்து நிறுத்த அரசாங்கம் பகீரத பிரயத்தனம்



கல்வி தனியார் மயமாக்கலை எதிர்த்து அனைத்து பல்கலைக் கழக மாணவர்கள் ஆனி 19 (ஜீலை 03) ம் நாள் எதிர்ப்பு பேரணி ஒன்றினை நடத்தினர். ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக்கழகம் அமைந்திருக்கும் விஜேராம பிரதேசத்தில் ஆரம்பித்த பேரணி லிப்டன் சுற்று வட்டாரத்தில் அமைந்திருக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரை சென்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை முற்றுகையிட்ட மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தினர். இந்த பேரணியில் சுமார் 5000 வரையிலான மாணவர்கள் பங்குபற்றி இருந்தனர். இறுதி நிமிடம் வரை பேரணியை தடுத்து நிறுத்த அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டது.

2



80 களில் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய எதிர்ப்பு பேரணி ஒன்றின் காட்சிப்படம் தலைமுறைகள் பல கடந்தாலும் தாகம் அடங்கிடவில்லை இன்றும் !!!

## ஜயபுர பல்கலைக்கழகத்தில் நெருக்கடியான நிலை

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி மற்றும் மாணவர் நலன்புரி சேவைகளில் தற்போது ஏற்ப்பட்டிருக்கும் குளறுபடிகளுக்கு தீர்வினை கோரி போராடும் மாணவர்களுக்கு தீர்வினை வழங்குவதினை விடுத்து அடக்குமுறைகளை கட்டவிழ்த்து, அமைதியான நடவடிக்கைகள் மற்றும் மாணவர்கள் ஒன்று கூடும் உரிமை, பல்கலைக்கழகத்தினுள் சுதந்திரமாக கல்வி கற்பதற்கு இருக்கும் உரிமை என்பவனற்றை பறித்து பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். விரிவுரை மண்டப வசதிகள் போதாமை, விரிவுரை மண்டபங்களில் நிலவும் பிரச்சினைகள், போதியளவிளான விடுதி வசதிகள் இல்லாமை, நீண்டகாலம் விடுதி நிர்வாகம் சீரின்மை, சிற்றுண்டிசாலை வசதியின்மை, சிற்றுண்டிசாலைகளில் அதிகரித்த விலையுயர்வு, சுகாதார வசதிகள் சீரின்மை, நிர்வாகம் ஒழுங்கின்மை போன்ற பிரச்சினைகளினால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்க்கொள்கின்றனர். அண்மையில் அனுமதிக்கப்பட்ட முதலாம் வருட மாணவர்களுக்கு பல்கலைக்கழக துணைப் பண்பாட்டினை அறிமுகப்படுததும் வகையிலும் மாணவர்களிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவத்தினையும் வளர்த்திடும் நோக்கிலும் சிரேஷ்ட மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகளை குழப்பியடிக்கும் வகையில் பீட நிர்வாகத்தினருடன், விரிவுரையாளர்களும் ஈடுபடுத்தப்பட்டு, மாணவர்களிற்கும் விரிவுரையாளர்களிற்கும் இடையில் முறுகல் நிலையை தோற்றுவிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த ஆனி 29 (ஜீலை 13)ம் திகதி பல்கலைக்கழகத்தில் மாணவர் இயக்க வரலாறு, பல்கலைக்கழக மாணவர்களின் கடமை, பல்கலைக்கழகங்களினுள் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக முதலாம் வருட மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் வளாகத்தின் பண்டாரநாயக்க மண்டபத்திற்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தின் போது, வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள்

2

## ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மீது நிர்வாகத்தின் பழிவாங்கல் தடையுத்தரவு

ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்கள் நிர்வாகத்தினரால் ஒழுக்காற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்ப்பாட்டில் மாணவர் வீரர்கள் தினம் களனி பல்கலைக்கழகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டது. அரசாங்ம் இதனை தடுக்கும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் புதுவருட விழாவொன்றினை ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் ஒழுங்குசெய்தது. கல்வி தனியார் மயமாக்கலிற்கு எதிரான தீர்க்கமான போராட்டத்தில் குதித்துள்ள மாணவர்களின் அமைப்பு ரீதியான பலத்தை சிதைத்திட கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படும் அரசாங்கம், அதன் ஒரு திட்டமாகவே இலவசகல்வியை காப்பதற்காக போராடி உயிர்த்தியாகம் செய்த மாணவர்களை நினைவுக்கூறும் நிகழ்வை சீர்குலைக்க முயன்றது.

2


7
6 மாணவர் போராட்டத்துக்கு வித்திட்ட குழல்
3 இறுதி மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் இலவசகல்வி

## கல்வி தனியார் மயமாக்கலிற்கு... (தொடர்ச்சி)

பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பு நோக்கி வருவதற்காக ஒழுங்கு செய்திருந்த பேரூந்துகளின் உரிமையாளர்களையும் சாரதி-களையும் கடுமையாக அச்சுறுத்திய புலனாய்வு துறையினர், மாணவர்களை கொழும்பிற்கு அழைத்து சென்றால் போக்குவரத்து சேவை அனுமதி பத்திரத்தினை இரத்து செய்வோம் என அச்சுறுத்தல் விடுத்தனர். அச்சம் காரண-மாக பல பேரூந்து உரிமையாளர்கள் பின்வாங்கினர். எனினும் மாணவர்கள் மாற்று வழிகளை கையாண்டு கொழும்பு நோக்கி வந்து சேர்ந்தார்கள். அரசாங்கத்தின் இவ்வாறான அழுத்தம், தலையீடுகள் காரணாக மாணவர்கள் பலரிற்கு பேரணியில் கலந்து கொள்ள முடியா-மல் போனது. எனினும் 5000 ற்கும் அதிகான மாணவர்கள் பேரணியில் பங்குபற்றியமையானது அரசாங்கத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெற்ற பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளாக மாண-வர்களின் ஆர்பாட்டங்களே இடம்பெற்று வருகின்றன. இந்த பேரணியின் போது இலவசகல்வியையும் கல்வி சுதந்திரத்தையும் வென்றெடுக்க அணித்திரள்வோம், தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிப்பதினை உடன் நிறுத்து, மாலபே தனியார் மருத்துவ கல்லூ ரியை உடன் மூடு, மகாபொல மற்றும் உதவிதொகை பணத்தினை 5000 ரூபா வரை அதிகரி, பாடசாலையில் கட்டணங்கள் வசூலிப்பதினை உடன் நிறுத்து, மாணவர்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்து, தனியார் பல்கலைக்கழகங்களை உடன் மூடு,உயர்தரம் சித்தியடையும் சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியை வழங்கு, சகல பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விடுதி வசதியை வழங்கு, பல்கலைக்கழகங்களில் கட்டணங்கள் அறவிடுவதை நிறுத்து, சகல இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் எதிராவோம் - மக்களின் உண்மையான பிரச்சினைகளிற்காக போராடுவோம் வாழ்க்கை செலவை குறை - உழைக்கும் மக்களின் வேதனத்தினை உயர்த்து, கல்வி விற்பனை பண்டமல்ல - எமது உரிமையாகும், பல்கலைக்கழகங்களில் நிலவும் 5000 மாணவர் வெற்றிடங்களை உடன் நிரப்பு, பாடசாலை கல்வியை சீர்குலைத்து மேலதிக வகுப்பு கல்வியை வளர்த்தெடுப்பதினை நிறுத்து ஆகிய கோசங்களை தாங்கிய பாதாகைகள் ஏந்தி செல்லப்பட்டன. மாணவர்களின் கல்வியை பாதிக்கும் சமூக பிரச்சினைகளுக்கு எதிரா-கவும் மாணவர்கள் போராட முன்வந்திருப்பது மிக முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும். இதன் போது உரையாற்றிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்ப்பாட்டாளர் சஞ்சீவ பண்டார எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக மாணவர் - தொழிலாளர் கூட்டணியை ஏற்படுத்தி ஒன்றினைந்து போராடுவோம் என்று தெரிவித்தார்.

## பெண்களின் சம உரிமையைக் கண்டு அவர்கள் அஞ்சுகின்றனர்

### – மலாலா –



தலிபான் பயங்கரவாதிகளால் சுடப்பட்ட பாகிஸ்தான் சிறுமி மலாலா, ஐ.நா சபையில், நேற்று உரையாற்றினார். தலிபான்கள், பெண்கள் பள்ளிக்கு செல்வதை எதிர்த்தனர். பாகிஸ்தானில், பெண்களின் கல்விக்காக பிரசாரம் செய்த, மலாலா யூசுப்சாய் என்ற மாணவியை, கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், தலிபான்கள் சுட்டனர். இதில், மலாலாவுக்கு தலை மற்றும் கழுத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையில், மலாலாவுக்கு, லண்டனில் உயர் சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது உடல் நலம் தேறியுள்ள மலாலா, நியூயார்க்கில் உள்ள ஐ.நா சபையில், நேற்று தனது 16வது பிறந்த நாளைக் கொண்டாடினார். இதன் போது உரையாற்றிய மலாலா 'என் உடல் நலம் தேறுவதற்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றி. தலிபான்கள் என்னை சுட்டதன் மூலம், நான் அமைதியாகி விடுவேன் என நினைத்தனர். என்னை துளைத்த அவர்களின் குண்டு, பல-ஆயிரம் குரல்களாக உருவெடுத்துள்ளது. தைரி-யமும், வலிமையும் உயிர்த்தெழுந்துள்ளன. தலிபான்களுக்கு எதிராக நான் இங்கு பேசவரவில்லை. ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தவே இங்கு வந்துள்ளேன்.தலிபான்களின் குழந்தைகளுக்கும் கல்வி அவசியம். இதையெல்லாம் முகமதுநபி, ஏசுநாதர், புத்தர், மகாத்மாகாந்தி ஆகியோரது போதனைகளின் மூலம் உணர்ந்துள்ளேன். கூர்மையான வாளைவிட, பேனா முனை சக்தி வாய்ந்தது என்பது உண்மை தான். எனவே தான், பயங்கரவாதிகள் கல்வியை கண்டு பயப்படுகின்றனர். பெண்களின் சம உரிமையை கண்டுஅவர்கள் அஞ்சுகின்றனர்" என்று கூறினார். மலாலா தற்போதைய நிலையில் உலகளாவிய ரீதியில் கவனத்தினை ஈர்த்துள்ளார். மேலும் உலகளாவிய ரீதியில் கல்வி சமத்துவத்தினை வலியுறுத்தும் குரல்கள் வலுபெற்று வருவதும் குறிப்பிடதக்க விடயமாகும்.


### எம்முடன் கரம் கோர்த்திடுங்கள்

மாணவர் குரலின் சந்தாதாரர் ஆகி பத்திரிக்கையினை
உங்கள் முகவரிக்கே வரவழைத்திட முடியும்.
10 இதழ்களிற்கான சந்தா ரூபா 300.00
மேலும் மாணவர் குரலில் தங்கள் கல்வி
நிறுவனங்களின் நிகழ்வுகள் மற்றும் உங்களது
ஆக்கங்களையும் இடம் பெற செய்யலாம்.
தொடர்புகளுக்கு
editor.maanavarkural@gmail.com
0777826814

**இடர்தீர ஒன்றினைவோம் !**

**மாணவர் சக்தியினை உணர்த்திடுவோம்... !**


## ஜயபுர பல்கலைக்கழகத்தில்... (தொடர்ச்சி)

பீடத்தின் பீடாதிபதி, நிர்வாக அதிகாரிகள் மற்றும் விரிவுரையாளர்கள் உட்பட்ட குழுவி-னர் அவ்விடத்திற்கு பிரவேசித்து திட்டி தீர்த்ததுடன் மாணவர்களுக்கு அச்சுறுத்தலும் விடுத்துள்ளனர். இதன் போது மாணவர்களுக்கு சாபம் விடுத்து மாணவர் ஒருவரை தாக்க மேற்படி குழுவினர் முயன்றுள்ளதுடன் வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீட மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்களின் பரீட்சை பெறுபேறுகளை காட்டி மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்களின் மீது காழ்புணர்ச்சியை வெளிபடுத்தியுள்ளனர். விரிவுரையாளர் சங்கம் தங்கள் உரிமைகளிற்காக வேலை நிறுத்த போராட்டம் செய்யும் அதே வேளை இவ்வாறான நடவடிக்கைகளையும் சமாந்திரமாக மேற்க்கொள்வது இங்கு குறிப்பிடதக்கது. மேலும் மாணவர் ஒன்றியத்தினை பதிவு செய்தல் நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் தாமதிக்கும் நிர்வாகம் மாண-வர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதினையும் தவிர்த்து வருகின்றது. மாணவர்களின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து முட்டுக்கட்டையிட்டு வரும் நிர்வாகம் மாணவர் தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்து கலை மற்றும் சமூக பீடத்தினதும்,வர்த்தக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடத்தினதும் மாணவர்கள் 50 பேரும் மருத்துவ பீட மாணவர்கள் 23 பேரும் வகுப்பு தடைக்கும் 11 மாணவர்களின் மாணவர் தகைமை பறிப்பிற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். மேலும் தீவிரமடைந்திருக்கும் கல்வி மற்றும் மாணவர் நலன் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெறும் வகையிலும், பல்கலைக்கழகத்தினுள் ஒன்றினைந்து செயற்படுவதற்கும் சுதந்திரமாக செயற்படுத்துவதற்கும் இருக்கும் உரிமையை வென்றெடுப்பதற்கும் கடந்த 19ம் தி-கதி 2000 த்திற்கும் அதிகமான மாண-வர்கள் பல்கலைக்கழகத்தினுள் போராட்டம் ஒன்றினை நடத்தினர். இதற்கு நிர்வாகம் 15 மாணவர்களுக்கு வகுப்பு தடை விதித்து விடையளித்தது.

இதன் பின் கடந்த 26 ம் திகதி பல்கலைக் கழகத்திலிருந்து நுகேகொட வரை 2000 த்திற்கும் அதிகமான மாணவர்கள் எதிர்ப்பு பேரணி ஒன்றினை நடத்தினர். இதன் போது தமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை போராட்டத்தினை கைவிட போவதில்லை என மாணவர்கள் தெரிவித்தனர்.

## சஞ்சீவபண்டாரவின் கைதும் காவல் நாய்களின் போலிமுகங்களும்



கடந்த **ஆடி** 11 (ஜீலை 26) ம் திகதி ஜயபுர பல்கலைக்கழகத்திலிருந்து நுகே-கொட வரை மாணவர்கள் மேற்க் கொண்ட எதிர்ப்பு பேரணியை ஒழுங்கு செய்தமை அதற்கு தலைமை தாங்கியமை மூலம் இதற்கு முன் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பிணை நிபந்தனையை மீறியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவை ஏற்ப்பாட்டாளர் சஞ்சீவ பண்டார கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் விரிவுரையாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடத்திய போது கொழும்பில் மாணவர்கள் நடத்திய ஆர்பாட்டத்தின் போது பொது சொத்துகளுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றசாட்டின் பெயரில் சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு பின் கைது செய்ப்பட்டார். இதன் போது இனி வரும் காலங்களில் ஆர்பாட்டங்களில் ஈடுபடக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த பிணை நிபந்தனையை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டே ஏற்ப்பாட்டாளர் சஞ்சீவபண்டார கைது செய்யப்பட்டார். கல்வி தனியார் மயப்படுத்தலிற்கு எதிரான தீவிர போராட்டங்களுக்கு தலைமை வகித்தமையே இவர் சிறையிலடைக்கபட்டமைக்கு காரணம். அரசின் தனியார் கல்வி திட்டத்திற்கு பெரும் சவாலாக இருக்கும் மாணவர் போராட்டங்களை மழுங்கடிக்கவே அரசாங்கம் அரச இயந்திரத்தின் காவல் நாய்களான பொலீசையும் நீதிமன்றத்தினையும் கொண்டு இவ் அராஜகத்தினை அரங்கேற்றுகிறது. நீதிமன்றமும் பொலிசும் மீண்டும் ஒருமுறை தாங்கள் மக்களுக்கான கட்டமைப்பு இல்லை என்பதினையும் அரசின் அதிகாரத்தினை காப்பதற்காக மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசின் கட்டுபாட்டினுள் மக்களை அடக்கி ஆளவும் உருவாக்கப்பட்ட அடக்குமுறை கருவிகள் என்பதனையும் நிரூபித்துள்ளன.

## ரஜரட்டை... (தொடர்ச்சி)

கல்வி தனியார் மயமாக்கல் போராட்டத்தில் அரசாங்கத்திற்கு சவால் விடுக்கும் வகையில் ஒன்று சேர்ந்துள்ள மாணவர்களிற்கு அவர்களின் முன் மாதிரியான மாணவர் வீரர்களை நினைவு கூறும் நிகழ்வு நடத்தப்படுவது பெரும் உந்து சக்தியையும் உத்வேகத்தினையும் அளிக்கும் என்ற காரணத்தினாலேயே அரசாங்கம் அதனை சரியாக நடத்தவிடாமல் சீர்குலைக்க ஒரு கோடி என்ற மிக பெரிய தொகையை ஒதுக்கி புது-வருட விழாவை நடத்தியது. இதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்த ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழகங்களில் பல வளக் குறைப்பாடு நிலவுகையில் இவ்வாறான பெரும் தொகையை செலவு செய்வதினை கேள்விக்கு உட்படுத்தியதோடு அரசாங்கத்தின் புதுவருட விழாவை முற்றாக புறகணிப்பதாக அறிவித்தனர். இதற்கு ஒத்துழைப்பு கொடுத்த ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் விழாவை புறக்கணித்திட, ஒரு கோடி ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்ட விழா கிழக்கு, யாழ், தென்கிழக்கு மற்றும் அரசாங்க ஆதரவு மாணவர்களின் சிறு குழுவினரின் பங்கு பற்றுதலுடன் உப்பு சப்பில்லாமல் நடந்து தோல்வியில் முடிந்தது. இதனால் அவமானமடைந்த அரசாங்கம், பல்கலைக்கழக நிர்வாகம் மூலம் மாணவர் ஒன்றியத்தினை தடை செய்ததோடு மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்களை ஒழுக்காற்று விசாரனைக்கு அழைத்துள்ளனர். முற்று முழு-தான பழி தீர்க்கும் நடவடிக்கையாகவே நிர்-வாகம் விசாரனைக்கு அழைப்பு விடுத்தமையும் மாணவர் ஒன்றியத்தினை தடை செய்தமையும் அமைந்துள்ளது. இதே போன்றே வடமேல் பல்கலைக்கழகத்திலும் தேசத்திற்கு மகுடம் என்ற கண்காட்சியை நடாத்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை மாணவர் ஒன்றியம் கடுமையாக எதிர்த்துள்ளது.

மாணவர் குரல்

தமிழ் பேசும் மாணவர்களின் குரலாய் தமிழ் மாதத்தின் முதல் தினம் தோறும் தமிழ் மாணவர் செயற்குழுவினால் வெளியிடப்படும் மாத இதழ்
தொடர்புகளுக்கு 0777826814
மின்னஞ்சல் editor.maanavarkural@gmail.com
முகபுத்தகத்தில் www.facebook.com/maanavarkural
திருவள்ளுவர் ஆண்டு 2044 கடக மாதம்

# எது பண்பாடு?

அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சிங்கள மாணவர்கள் ஜோடி ஜோடியாக குத்தாட்டம் போட்டமை சலசலப்புக்களையும் முணு முணுப்புக்களையும் தோற்றுவித்திருந்தது. சிங்கள மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு வந்து தமிழர்களின் பண்பாட்டினை சீரழிக்கின்றார்கள் என விசனம் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் தனித்துவமான துணைப் பண்பாடு ஒன்று நிலவும். அந்த வகையில் யாழ் பல்கலைக்கழகத்திற்கென தனித்துவமான துணை பண்பாடு ஒன்று நிலவுகின்றது. யாழப்பாண பிரதேசத்தின் பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்த வகையிலேயே யாழ் பல்கலைக்கழகத்தின் துணைப் பண்பாடும் அமைந்திருந்தது. துணை பண்பாடுகள் பிரதான பண்பாட்டுடன் இணைந்ததாகவே தோன்றும். அந்த வகையில் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைப் பண்பாட்டினை மதிக்காது சிங்கள மாணவர்கள் செயற்பட்டமை ஆட்சேபத்திற்குரிய விடயமாகும். தென்னிலங்கை பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் இவ்வாறு செயற்படுவதில்லை. லிபரல் தன்மைமிக்க பண்பாட்டு கட்டமைப்பினை உடைய சமூகத்திலிருந்து வரும் சிங்கள மாணவர்கள் இறுக்கமான குடும்ப பிணைப்பினை கொண்ட தமிழ் சமூகத்தின் செல்வாக்கு செலுத்தும் பண்பாட்டினை அனுசரித்து நடந்திடலே சாதாரணமாக நிகழ வேண்டியதாகும். எனினும் யுத்ததில் வெற்றிகொள்ளப்பட்ட பிரதேசம் என்றும் அங்கு சிங்களவர்களுக்கே சகல உரிமைகளும் உண்டு என்றும் மமதை ஏற்றப்பட்ட சிங்கள சமூகத்தின் போக்கை சுமந்து வரும் சிங்கள மாணவர்களும் அதே ஆதிக்க மனோ பாவத்துடனேயே யாழ் பல்கலைக்கழகத்தினுள் செயற்ப்படுகின்றனர். சகலதுக்கும் இராணுவமும் புலனாய்வு காடையர்களும் அவர்களுக்கு துணை நிற்கின்றார்கள். இந்த அடிப்படையில் யாழ் பல்கலைக்கழகத்தினுள் சிங்களமாணவர்கள் நடந்த விதம் கண்டிக்கதக்கதாகும். குத்தாட்டத்திற்கு எதிர்ப்புக்கள் கிளம்பியபோது சிங்கள மாணவர்கள் அது தமது பண்பாடு என்றும் பண்பாட்டு நிகழ்ச்சிக்களை அரங்கேற்ற தமக்கு உரிமை உண்டென்றும் கூறியுள்ளனர்.


உண்மையில் சமூகத்தின் அங்கத்துவன் என்ற வகையில் மனிதன் பெற்றுக் கொண்ட அறிவு, நம்பிக்கைகள், கலை. பாரம்பரிய நடைமுறைகள், சடங்குகள் சம்பிரதாயங்கள் மற்றும் சகல திறமைகளினதும் சிக்கலான கூட்டே பண்பாடு எனப்படும். அந்த வகையில் மேற்க்குறித்த குத்தாட்ட பண்பாடு ஏதேனும் சிங்களவர்களின் பண்பாட்டில் இருப்பதாக நாமறியோம். கண்டிய நடனம் என்ற சிறப்பான நடனமே அவர்களின் பண்பாட்டு அம்சத்தில் உள்ளடங்கியுள்ளது. இந்த குத்தாட்டமானது தமிழர்கள் கட்டிகாக்கும் தனிதுவமான பண்பாட்டினை சீர்குலைத்து தனிதுவத்தை துவம்சம் செய்து சிங்களவர்களுடன் ஒன்றுகலத்தலடைய செய்திட வேண்டும் என்ற அரசாங்கத்தின் சிந்தனையை செயற்படுத்தும் இராணுவ மற்றும் புலனாய்வு தரப்பின் நேரடி வழிக்காட்டலிலே இடம்பெற்றுள்ளது. அதனை விட பல்கலைக்கழகத்தினுள் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என கூட சிங்கள மாணவர்களுக்கு இராணுவத்தினரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த குத்தாட்டத்தை நியாயப்படுத்திய மற்றும் ஆதரித்த தரப்பினர் உட்பட அனைவரும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

மறுபுறம் தமிழ் மாணவர்களும் எதிர்குரல் எழுப்பியவர்களும் சிங்களவர்கள் இங்கு வந்து குத்தாட்டம் போட்டு எம் பண்பாட்டினை சீரழிக்கின்றார்கள் எனகுரல் எழுப்பியிருந்தனர். உண்மையில் இங்கு அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது. அரைகுறை ஆடையுடன் குத்தாட்டம் போடுவது பண்பாட்டினை சீர்குலைக்கிறது அதனை தடுத்திடவேண்டும் என்று கூறினால் முற்றுமுழுதாக அதனை தடுத்திட வேண்டும். தென்னிந்திய சினிமாவில் நதீதாவும் மாளவிகாவும் ஆபாசமான பாடல் வரிகளுக்கு அரைநிர்வாண ஆட்டம் போடுவதை வாய் பிளந்து ரசிக்கும் எமக்கு இப்படி கூற என்ன அருகதை இருக்கின்றது. சினிமா கொட்டகைகளில் இதனை ரசிப்பதற்காகவே கூட்டம் கூடுகின்றதே. பண்பாட்டிற்கு முரண் என்றால் பணம் உழைப்பதற்காக கலை என்ற பெயரில் நடத்படும் இந்த கூத்தடிப்புகளை தானே முதலில் புறக்கணித்திட வேண்டும். அவற்றிற்கு சமரசம் எதுவுமின்றி மறுப்பு சொல்லிட வேண்டுமல்லவா? சற்று சிந்தித்து முடிவெடுங்கள். அதனுடன் சேர்த்து நாம் தற்போது பண்பாடு என்று கூறிவருகின்றோமே அதுவா எமது உண்மையான பண்பாடு என்றும் சிந்தியுங்கள். சிந்தனைக்கு ஏற்ப செயலாற்றுங்கள்.

# இறுதி மூச்சுவிட்டுகொண்டிருக்கும் இலவசக்கல்வி

இலங்கையின் இலவசக்கல்வியின் தந்தை என அழைக்கப்படும் மிதவாதியான அமரர் சி.டப்ள்யு.சி. கன்னங்கர அவர்கள் இலவசக்கல்வி சட்டமூலத்தினை பாரளுமன்றத்தில் சமர்பிக்கவிருந்த வேளை கொழும்பு றோயல் கல்லூரியில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க அவர்கள் இலவசக்கல்வி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் நாம் எமது செல்வாக்கினை இழந்து தெருவில் நிற்கும் நிலைவரும் என்று குறிப்பிட்டார். அவர் நாம் என்று குறிப்பிட்ட நாட்டின் ஆட்சி அதிகாரத்தினை தன் கைபிடியில் வைத்திருக்கும் மேட்டுகுடி வர்க்கம் இலவசகல்வி அறிமுகபடுத்தப்பட்ட தினத்திலிருந்து அதற்கு எதிராக செயற்பட ஆரம்பித்து விட்டது. கல்வி இலவசமாக வழங்கப்படும் போது, கல்வி சமூக உரிமையாக்கப்படுவதோடு, அனைவரும் அதனை பெற உரித்துடையவர்களாவர். சமூகத்திலே கல்வி கற்ற சிறு பிரிவினர் ஏனையோர் மீது மேலாதிக்கம் செலுத்துவது தடுக்கப்படும். செல்வந்தர்களுக்கு மட்டும் வரபிரசாதமாக அமைந்த கல்வி அனைவரினதும் உரிமையாக்கப்படும் போது, ஒரு குறிப்பிட்ட வர்க்கம் மாத்திரம் கல்வியை பயன்படுத்தி சமூகத்தில் ஏனையோரை அடக்கியாள்வது தடுக்கப்படும். இந்த ஆதங்கத்தினையே டி.எஸ். சேனநாயக்க அவர்கள் அப்போதே வெளிபடுத்தியிருந்தார். எதிர்ப்பின் மத்தியிலேனும் நடைமுறையிலிருந்த இலவசகல்விக்கு, திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டதிலிருந்து பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டது. திறந்தபொருளாதார கொள்கை என்பது சகலதையும் தனியார் மயமாக்கி இலாபம் உழைத்திடும் பண்டங்களாக மாற்றிடும். இதன் விளைவாக தான் இன்று அன்பு, காதல், பாசம் என்பன கூட பணத்திற்காக விற்கப்படும் பண்டங்களாகியுள்ளன. 1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டாலும் தமிழ் தேசியத்தின் ஆயுதபோராட்டம், 80 களில் சிறிலங்காவில் நடந்த கிளர்ச்சி என்பன திறந்த பொருளாதார கொள்கையை முழுமையாக அமுல்படுத்த வாய்ப்புக்களை வழங்கிடவில்லை. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த கையோடு திறந்த பொருளாதார கொள்கையை முழுவீச்சில் நடைமுறை படுத்தி வருகின்றார் மகிந்த. கல்வியை தனியார் மயமாக்கி காசு பார்த்து விட துடியாய் துடிக்கின்றார் இந்த துட்டகெமுனு. இவரின் ஆட்சியில் தான் தேசிய உற்பத்தி வருமானத்தில் கல்விக்காக 1.1 சதவீதம் என்ற மிககுறைந்த நிதி ஒதுக்கப்பட்டது. இத்தனைக்கும் உலகளவில் தேசிய உற்பத்தி வருமானத்தில் கல்விக்கு 6 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படல் வேண்டும் என்ற யுனெசெப் நிறுவனத்தின் நியமத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிராக தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் போராட்டம் நடத்திவருகின்றனர். ஏனைய பொதுத்துறைகளை எல்லாம் இலகுவாக தனியார்மயபடுத்தி வரும் அரசாங்கத்திற்கு மாணவர் இயக்கத்தின் போராட்டங்கள்,கல்வியை தனியார் மயமாக்குவதில் பெரும் தலையிடியாய் அமைந்துள்ளது. மாணவர்கள் சரியான போராட்ட கோசங்களை தேர்ந்தெடுத்து சமூகத்தின் மத்தியில் போராட்டத்தினை கொண்டு சென்றமை அரசாங்கத்திற்கு பெரும் பின்னடைவாகவும் சவாலாகவும் அமைந்தது. அதன் காரணமாக தான் தனியார் பல்கலைக்கழக சட்டமூலத்தினை மீளபெறும் நிலை வரை அரசாங்கம் சென்றது. மாணவர் இயக்கங்களை சிதைத்து அழித்திடாமல் தனியார் கல்வியை நடைமுறைக்கு ஒருபோதும் கொண்டு வரமுடியாது. ஆகவேதான் மாணவர் இயக்கங்களை அழித்திட அரசாங்கம் முழு மூச்சுடன் களமிறங்கியுள்ளது. இந்த பொறுப்புகளுடனேயே எஸ். பி.திஸாநாயக்கவிற்கு உயர்கல்வி அமைச்சு வழங்கப்பட்டது. இவர் முதலில் குறிவைத்தது அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினை. இவர் பல்கலைக்கழகங்களில் சில மாணவர்களுக்கு பணம் கொடுத்தும் மதுபாணங்கள் வாங்கிகொடுத்தும் சுயாதீன மாணவர் சங்கம் என்ற பெயரில் மாணவர் சங்கம் ஒன்றினை அமைத்து மாணவர்களை தன் பக்கம் இழுத்தெடுக்க முயற்சித்தனர். கொள்கை எதுவுமற்ற இவர்களை மாணவர்கள் புறகணித்திட்டனர். குறுகிய இலாபகங்களிற்காக செயற்படும் சிறு குழுவினராகிய இவர்களே பல்கலைக்கழகங்களினுள் தொடர் குழப்பங்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர். மறுபுறம் பகிடிவதை தடை சட்டத்தினை பயன்படுத்தி மாணவர் ஒன்றியங்கள் மற்றும் மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்கள் மீது தடைகள் விதிக்கப்பட்டது. எனினும் மாணவர்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. இதன் காரணமாக தான் முதன் முதலில் பல்கலைக்கழக மாணவர்களிற்கு தலைமைத்துவ பயிற்சி என்ற பெயரில் இராணுவத்தின் அடிமை சிந்தனையை புகுத்தினர். இந்த பயிற்சிகளின் போது முற்றுமுழுதாக மாணவர் இயக்கங்களை கேலிசெய்து அதற்கு எதிரான நிலைப்பாட்டினை எடுக்கும் வகையில் மாணவர்கள் மூளைச்சலவை செய்யப்படுகின்றார்கள். பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் காவல் கடமைகளிற்கும் இராணுவத்தினர் நியமிக்கப்படுகின்றார்கள். உயர் தரத்திற்கு தோற்றாதவர்கள் கூட பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றார்கள். இவை அனைத்தும் ஒரே ட்ரேகியுலா பாம்பின் பலதலைகள் போன்றனவாகும். மாணவர் இயக்கத்தினை அழித்தால் மாத்திரமே கல்வியை தனியார் மயமாக்கும் திட்டத்தினை அரசாங்கத்தினால் இலகுவாக நிறைவேற்ற முடியும். அதற்காக என்ன விலையையும் கொடுக்க அரசாங்கம் தயாராகிவிட்டது. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளின்படி கல்வியை தனியார் மயமாக்குவதினை மேலும் தவிர்க்க முடியாது. ஆகவே அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. எந்த ஒரு செயலும் அதற்கெதிரான விளைவை கொண்டிருக்கும் என்ற நியதிக்கமைய மாணவர்களின் போராட்டங்களும் தீவிரமடைந்துள்ளன. எல்லா போராட்டங்களையும் இரும்பு கரம் கொண்டு அடக்கி அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளதோடு பல்கலைக்கழககங்களினுள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்ப்பாட்டாளரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் 53 மாணவர்கள், றுகுனு பல்கலைக்கழகத்தில் 60 மாணவர்கள், ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் 75 மாணவர்கள், திறந்த பல்கலைக்கழகத்தில் 3 மாணவர்கள் கடந்த ஒரு மாதத்தில் வகுப்பு தடைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். களனி, சப்ரகமுவ, ரஜரட்டை, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களில் மாணவர் ஒன்றியங்கள் மீது தடை விதிக்கப்பட்டுள்ளன. ஜயவர்தன பல்கலைக்கழகத்தின் 58 மாணவர்கள் மீது 85 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மாணவர் ஒன்றிய செயற்பாட்டாளர்களின் வீடுகளுக்கு சென்று புலனாய்வு துறையினர் உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். மாணவர்களின் சொந்த ஊர்களில் குறிப்பாக மாணவிகளின் சொந்த ஊர்களில் அவர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் விதமாக சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். இவ்வாறு பலவழிகளில் மாணவர்களின் போராட்டங்களை மழுங்கடித்து கல்வியை தனியார் மயபடுத்தும் முயற்சியின் இறுதி கட்டத்தினை நிறைவேற்ற அரசாங்கம் தயாராகியுள்ளது. இந்தநேரத்தில் வேடிக்கை பார்த்துகொண்டு இருப்பமாயின் எதிர்காலத்தில் கையிலிருக்கும் பணத்தின் அளவிற்கே கல்வியை பெறவேண்டிய நிலை உருவாவதினை தடுத்திட முடியாது. மாணவர்கள் தமக்கிடையிலான ஒற்றுமையையும் உறுதியையும் வலுப்படுத்திக் கொண்டு அடக்கு முறைகளையும் கல்வி தனியார் மயமாக்கலையும் தோற்கடிக்க களமிறங்க வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. இனிவரும் காலம் நெருக்கடியானதும் தீர்க்கமானதும் ஆகும். இந்த போராட்டத்தில் யாழ், கிழக்கு, தென் கிழக்கு பல்கலைக்கழகங்களும் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியமானதாகும். குறைந்தபட்சம் இது தொடர்பான விழிப்புணர்வையேனும் ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். வெறுமனே அரசியல்வாதிகளின் தேவைகளிற்காக அவர்கள் எழுதிதரும் அறிக்கைகளில் கையெழுத்திடுவதுடன் மட்டுமல்ல தான் சார்ந்த பிரச்சினைகளிலும் மாணவர் இயக்கம் தீர்க்கமான தலையீடுகளை செய்திட வேண்டும். அவ்வாறில்லாத சமூக அக்கறைகள் போலியானதாகும்.



# யாழ் பல்கலைக்கழக போராட்டங்கள் - 02

இராயாகரன்
முன்னாள் செயற்குழு உறுப்பினர் (1987-1988)
யாழ்.பல்கழக மாணவர் அமைப்புக் குழு

## மாணவர் போராட்டத்துக்கு வித்திட்ட சூழல்

யாழ் பல்கலைக்கழகம் அனைத்து பல்கலைக்கழகங்கள் போல், இடதுசாரிய போராட்ட மரபைக் கொண்டதல்ல. மற்றைய பல்கலைக்கழகத்தில் இருந்து தன்னைத்தான் தனிமைப்படுத்தி கொண்டு, வலதுசாரி தேசியவாத கிணற்றுக்குள் வீழ்ந்து கிடந்தது. சிந்தனை செயல் அனைத்தும், யாழ் மேலாதிக்கத்தையே பிரதிபலித்தது. தமிழ் தேசிய அரசியலுடன் பின்னிப் பினைந்தாகவும், அதில் எற்பட்ட வந்த முரண் சார்ந்த பலமான சக்திகளுடனேயே தன்னை வெளிப்படுத்தி வந்தது. இதற்கு மாறாக சமூகத்தினை முன்னின்று வழிநடத்தும் முற்போக்கான வரலாற்றுக் கூறுகளை வெளிப்படுத்தவில்லை.

அரசின் இனவொடுக்முறைக்கு எதிரான யாழ் மேலாதிக்க தனத்தை தன் முன்னோக்காகக் கொண்ட, தமிழ்தேசிய பிற்போக்குவாதத்துக்கு பின்னால் பல்கலைக்கழகம் கொடி பிடித்தது நின்றது. இலங்கையின் மற்றைய பல்கலைகழகங்கள் மாணவர்கள் நலன் சார்ந்து நடத்திய பொதுப் போராட்டங்களில் இருந்து கூட, ஒதுங்கி நின்றது. தமிழ் மக்கள் மேலான இனவொடுக்கு முறைக்கு எதிராக, மற்றைய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து போராடக் கூட முனையவில்லை. சமூகத்தில் இருந்த அதே பிற்போக்கான கூறுகளை பிரதிபலித்தது நின்றது. தன்னைத்தான் தனிமைப்படுத்திக் கொண்டது, தமிழ் தேசியவாதிகள் முன்னனெடுத்த தேர்தல் அரசியலையும், அதைத் தொடர்ந்து ஆயுதக் குழுக்களின் வலதுசாரிய அரசியல் பாதையையும் பின்தொடர்ந்து வால்பிடித்துச் சென்றது. சமூகத்தின் முரண்பாடுகள் மேல், முற்போக்கான அரசியல் பாத்திரத்தை ஆற்றத் தவறியது.

அதே போல் சமூகத்தில் கூட இதற்கான அரசியல் செயற்பாட்டுத் தன்மை இருக்கவில்லை. வலதுசாரிய தமிழ் தேசியவாதமே அனைத்துமாக, இடதுசாரிய வர்க்க அரசியலை நடைமுறை முன்னோக்காகக் கொண்ட எதுவும் சமூகத்தை முன்னின்று அணி திரட்ட முற்படவில்லை. யாழ் பல்கலைக்கழகமும் தமிழ் தேசிய வலதுசாரிய பிற்போக்குள் முடங்கிக்கிடந்தது.

யாழ் பல்கலைகழகம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை இதுதான் நிலையென்றால், 1985 முதல் 1990 வரையான காலம் மட்டுமே விதிவிலக்காகும். 1985 வலதுசாரிய தேசியத்துக்கு எதிரான எதிர்நிலைப் போராட்டத்தையும், அரசுக்கு எதிரான போராட்டத்தையும் தன்னுள் பதிவாக்கி இருக்கின்றது. ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்தாக, மற்றைய பல்கலைக்கழகங்களுக்கு நிகராக, சமுதாயத்தின் பொது நலனை முன்நிறுத்தி அப்போது போராடியது. அரசை மட்டுமல்ல, இயங்கங்களையும் எதிர்த்து இடதுசாரிய போராட்டமாக நடைபெற்றது. 1960 களில் வடக்கில் நடைபெற்ற சாதியப் போராட்டம் போல், 1985 யில் யாழ் பல்கலைக்கழகப் போராட்டமும் முற்போக்கான வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்றியது. இது எந்த அரசியல் சூழலில், எந்த அரசியல் வடிவத்தில் எதைச் செய்தது என்பதை கற்றுக்கொள்வதன் மூலம் தான், மாணவர்கள் மீதுமான சமூகத்தின் மீதுமான தொடர் அடக்குமுறைகளை எதிர்கொள்ள முடியும்.

1980 களுக்கு முன் பராளுமன்ற தமிழ்தேசியத்தின் பின்னான அரசியலின் எடுபிடியாகவே யாழ் பல்கலைக்கழகமும் முடங்கிக்கிடந்தது. 1980களில் வெளியில் நடந்த அரசியல் ரீதியான பண்பு மாற்றத்துடன் பல்கலைக்கழத்தில் கூட மாற்றம் எற்பட்டது. தமிழ் தேசிய வலதுசாரிய பாராளுமன்ற வழிகளுக்கு துணைபுரியா வண்ணம் உருவான, தனிநபர் பயங்கரவாத அழித்தொழிப்பு அரசியல் போக்குடன் தான் இந்த மாற்றமும் அரங்கேறத் தொடங்கியது. பராளுமன்ற பாதையும், தனிநபர் அழித்தொழிப்பையும், தனக்குள் இணக்கமான அரசியல் உறவை நீண்ட நாட்கள் தொடர்ந்து நாடத்த முடியவில்லை. பராளுமன்ற சந்தர்ப்பவாதமும், பிழைப்புவாதமும், இதை வேறுபடுத்தி முரண்படவைத்தது. இந்த முரண்பாடு அரசியல் வழிமுறையில் எற்படவில்லை.

இந்த வகையில் 1980 களில் பாரளுமன்ற வழிக்கு எதிரான, அரசியல் குழுக்கள் உருவாகத் தொடங்கியது. அதற்குள் முரண்பாடுகளும், முரணான அரசியல் போக்குகளும் கூட உருவாகத் தொடங்கியது. அனைத்தும் யாழ் மேலாதிக் வலதுசாரிய தேசியத்தில் இருந்த படி, தன்னை இடதுசாரியமாகக் காட்ட முற்பட்டது. இடது வலது கலந்த கலவையாக, வலதுக்கு வலுசேர்க்கும் வண்ணம் இடதை பிரச்சாரம் செய்தனர். மறுதளத்தில் ரூசியா எகாதிபத்திய நலனை அடிப்படையாகக் கொண்டதை இடதுசாரியமாக காட்டிக் கொண்ட வலது தமிழ் தேசியத்தை முன்வைத்த இந்தியா ஆதரவுக் குழுக்களும் உருவானது. அன்றைய உலக ஒழுங்கில் இந்தியா ரூசியா ஏகாதிபத்தியத்தை சார்ந்து இருந்த போக்கில், இந்தியா ஆதரவை இடதுசாரியமாக காட்டிக் கொண்டது. பல்கலைக்கழகத்தில் கூட இது சார்ந்த முரண்பட்ட குழுக்கள் இயங்கிய போதும், அனைத்தும் வலதுசாரிய தமிழ்தேசியத்தை தமது அரசியல் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. பல்கலைக்கழகம் இந்த வலதுசாரிய பாதையிலேயே தொடர்ந்து சென்றது. ஆயுதப் போராட்டத்தை ஆதாரிக்கும் சூழலுக்குள், வலதுசாரியமாகவே பல்கலைக்கழகம் இருந்தது.

வலதுசாரிய பாதை தவறானது, மக்கள் சார்ந்த இடதுசாரிய பாதையே சரியான என்ற கருத்து ஆயுதப்போராட்டத்தை முன்நிறுத்திய வலதுசாரிய தளத்தினுள் இருந்து மேலெழுந்த வந்த போது, அதைத் தடுத்த நிறுத்தி பிற்போக்கான வலதுசாரிய தேசியமாக சீரழித்துவிடவும், இலங்கையில் மேலாதிக்கத்தை நிறுவவும், இந்தியா ஆயுதப் பயிற்சியை கொடுக்கத் தொடங்கியது.

1983 இல் இந்தியப் பயிற்சியுடனும், பண வழங்களுடனும் உருவான முரண்பட்ட குழுக்களின் வளர்ச்சி, பராளுமன்ற பாதையை முற்றாக நிராகரிக்க வைத்தது. மறுதளத்தில் எழுந்து வந்த இடதுசாரிய கூறுகளை எதிரியாக்கியது. அதே நேரம் ரூசியா சார்பாக இந்தியா - அமெரிக்கா என்று, அந்நிய கைக்கூலி அமைப்புகளாகவே இயக்கங்கள் வளர்ச்சியுற்றது. இந்த கைக்கூலி அரசியல் போக்கில் தான், பல்கலைக்கழகமும் பயணித்தது. இதில் இருந்து வேறுபட அது பயணிக்கவில்லை.

ஆயுதம் ஏந்தியக் குழுக்களோ அந்நிய நலனைகளைப் பேணிய படி, பணத்ததையும் ஆயுதங்களை முதன்மைப்படுத்தியது. பரந்துபட்ட மக்களை நிராகரிக்கத் தொடங்கியதுடன் முரண்பட்ட மக்களை எதிரியாகவே கண்டது. இந்த அரசியல் வழிமுறை மக்களின் வாழ்கை முறைக்கு முரணாக வளர்ச்சியுற்ற போது, மக்கள் மேலான பொது ஒடுக்குமுறையாக மாறியது. யாழ்பல்கலைக்கழகம் இதையிட்டு அலட்டிக் கொள்ளாது தமிழ்தேசியத்தின் பின் நின்றது. மக்கள் விரோத அந்நியக் கைக் கூலி இயக்கங்களாகவே இயக்கங்கள் வளர்ச்சியுற்ற போது, அதற்குள் முரண்பாடுகள் தோன்றின. தங்கள் அடிப்படை ஜனநாயக உரிமை சார்ந்தும், முன்பு கலவையாக புகுத்திய இடதுசாரியம் இணைந்தும் எழுந்த முரண்பாடு, மாற்று அரசியல் வழியாக முனைப்புப் பெற்றது. 1984-1985 இந்த முரண்பாடுகள் இயக்கத்தினுள் மற்றும் வெளியரங்குகளில் தீவிரமடைந்தது. விளைவு தனியான சித்திரவதை முகாங்களை நடத்துமளவுக்கு இயக்கங்கள் முன்னேறியதுடன், படுகொலைகள் வரை நடந்தேறத் தொடங்கியது. எல்லா இயக்கத்தில் இந்த முரண்பாடு வெவ்வேறு அளவில் காணப்பட்டது மட்டுமின்றி, இதை கையாளும் வடிவங்களும் கூட வேறுபடத் தொடங்கியது. ஆனால் இடதுசாரியத்தை ஒழித்துக்கட்டுவதையே பொதுவாகச் செய்தனர். இதன் போது கூட யாழ்ப் பல்கலைக்கழகத்தில் எந்த அரசியல் எதிர்வினையும் இருக்கவில்லை.

மறுதளத்தில் அமைப்புகளின் இருந்து இயக்க உறுப்பினர்கள் ஒதுங்கத் தொடங்கினர். சிலர் புதிய அரசியலைத் தேடினர். பல்கழைக்கழக கைக் கூலியாகி விட்ட மக்கள் விரோத வன்முறையை அடிப்படையாக கொண்ட வலதுசாரிய தேசியத்தை சார்ந்தே தொடர்ந்து இயங்கியது. இயக்கத்தில் இருந்து ஒதுங்கிய, வேறு அரசியல் கருத்து கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்த போதும் கூட, பல்கலைக்கழகத்தில் அது அரசியல் ரீதியாக பிரதிபலிக்கவில்லை.

1980க்குரிய இதே வரலாற்றுக் காலகட்டத்தில் இடதுசாரிய அடிப்படையைக் கொண்ட தமிழ் தேசிய விடுதலை முன்னணியும் (என்.எல்.எப்.ரி,) அந்நிய பயிற்சிகளை நிரகரித்தபடி இயங்கினர். இவர்கள் அரசியல் செயற்பாட்டில் இருந்து ஒதுக்கி செயலற்றுப் போன பழைய இடதுசாரியத்தில் இருந்தவர்களால், இந்த அமைப்பு தொடங்கப்பட்டது. இது மக்கள் திரள் போராட்டத்தை முன்னிலைப்படுத்திய ஆயுதப் போராட்டத்தை முன்வைத்தது. இதேபால் அதே காலத்தில் புலிகளில் இருந்து வெளியேறியவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவையோ, ஆயுத நடவடிகையில் ஈடுபடும் இரகசிய குழுவாக தன்னை மாற்றிக் கொண்டு இயங்கியது. என்.எல்.எப்.ரி.யில் இருந்து 1985-1986 இல் உடைந்து, பி.எல்.எவ்.ரி யாக உருவான மக்கள் தேசிய விடுதலை முன்னணி, ஆயுதப் போராட்டத்தை முன்னிலைப்படுத்திய மக்கள் போராட்ட பாதையை முன்வைத்தது. இதை விட தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தில் (புளாட்) இருந்து 1985 இல் உடைந்த தீப்பொறி, தனி-நபர் அழித்தொழிப்பை அடிப்படையாகக் கொண்ட இடதுசாரிய அராஜக அரசியலை முன்வைத்தது. கிட்டுக்கு குண்டு எறிந்தது உட்பட பல படுகொலை செயற்பாடுகளை முன்னெடுக்கவும் முனைந்தது. இதைவிட கூலி விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட பாசறை என்ற அமைப்பு அரசியல் ரீதியாக தன்னை வெளிப்படுத்தியது. 1986 இல் தமிழ் தேசியவாதிகள் முன்னெடுத்த மக்கள் விரோத அரசியலுக்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் குழுவாக தன்னை அடையாளப்படுத்தியது.

பழைய இடதுசாரிய வழிவந்தவர்கள் தேசிய முரண்பாட்டில் இருந்தும், வாக்க அரசியல் நடத்தையில் இருந்தும் விலகியவர்களாக காணப்பட்டனர். கட்சி பெயரில் கட்சியாக, திண்ணைக்கு திண்ணை கதைப்பதை அடிப்படையாகக் கொண்டு, வலதுசாரியத்துக்கு உதவுப்பவர்களாக இருந்தனர்.

இதுவே அன்றைய பொதுவான அரசியல் நிலைமையாகும். இயக்க வன்முறைகள் சமூகத்தின் மேலான பொது வன்முறையாக மாறிக்கொண்டு இருந்தது.

உருவாகி வந்த புதிய நிலையில், முரண்பாடுகள் மிக வேகமாக அரசியலுக்குள் மாற்றத்தை எற்படுத்திக் கொண்டிருந்த காலம். அதை தங்கள் கையில் எடுக்க முடியாத வண்ணம், பாரம்பரிய இடதுசாரிய கட்சிகள் செயலற்றுப் போய் இருந்தனர். புதிதாக இயங்கத் தொடங்கிய இடதுசாரியம் மக்களை தலைமை தாங்கி அழைத்துச் செல்ல முடியாத வண்ணம் அக புற முரண்பாட்டுக்குள் குறுகிக் கிடந்தது. மக்கள் திரள் பாதையை முன்னோக்கக் கொண்ட, இடதுசாரியமாக அது இருக்கவில்லை. என்.எல்.எப்.ரி. அதை முன்னோக்காக முன்வைத்த போதும், அதன் யாழ் மேலாதிக்கம் சார்ந்த அதன் அக புற பூர்சுவாதனத்திலான முரண்பாட்டுகளுடன் முன்னோக்கிச் செல்லும் தகுதியை இழந்து இருந்தது. ஆனால் அற்கான கூறுகளை அது கொண்டு இருந்தது. மக்கள் திரள் பாதையை கோருகின்ற சக்திகள், உதிரியாக காணப்பட்டனர். சமூகத்தில் எற்பட்டு வந்த முரண்பாடுகள், வெற்றிடத்தை விட்டுவிடுவதில்லை. இது பல்கலைக்கழகத்திலும் வெளிப்பட்டது.

வரலாற்று இயங்கியல் சூழல் சார்ந்து இடதுசாரிய அரசியலுக்கான புற நிலையான சமூகக் கூறுகள், முழுமையாக தமிழ்தேசியத்தைச் சுற்றி அதன் முரண்பாடுகளின் மேல் கணிந்திருந்தது. இயக்கங்கள் மேலான மக்களின் பொது அதிர்த்தியும், எதிர்ப்பும் மாற்றத்தைக் கோரியது. இயக்கங்களினுள் பொது அதிர்த்தி வளர்ச்சியுற்று இருந்தது. பயற்சி பெற்ற பலர், ஆயுதங்களுடன் வெளியேறி இடதுசாரிய போராட்டத்தைக் கோரினர். அதேநேரம் பலர் மக்களை நேசிக்கின்ற புதியதொரு போராட்டத்தை எதிர்பார்த்துக் காத்து இருந்தனர்.

இந்த புறநிலையான அரசியல் சூழலில், இடதுசாரியத்தை அடிப்படையாக கொண்ட ஒரு முன்னோக்கில் இருந்து எழுந்ததே யாழ் பல்கலைக்கழக மாணவர் போராட்டம். 1985ம் ஆண்டு என்.எல்.எப்.ரி,யைச் சேர்ந்த சிலர் யாழ் பல்கலைக்கழகம் சென்ற போது ராக்கிங்கு எதிரான போராட்டதில், அங்கு இயக்கங்களில் இருந்து வெளியேறிய மாணவர்கள் இணைந்த போதே, யாழ் பல்கலைக்கழகத்தில் புதிய போராட்டத்திற்கான அரசியல் பாதையை வித்திடப்பட்டது.

1985 ஆண்டு என்.எல்.எப்.ரி, தோழர்கள் தங்கள் மீதான ராக்கிங்களை எதிர்த்து "றாக்கிங் என்பது பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பண்பாட்டு அம்சமா!" என்று கேட்டு வெளியிட்ட துண்டுபிரசுரத்துக்கு ஆதாரவாகவும், எதிராகவும் போாராட்டங்கள் நடைபெற்றது. அதேநேரம் ராகிங்கை வன்முறை மூலம் ஒழித்தல் என்ற வலதுசாரிய புலித் தேசியவாதிகள், ராங்கிங்க்குள் முன்றாவது அணியாக தோன்றியது.

இதைச் சுற்றிய முரண்பாடுகளும், பல்கலைக்கழகத்தில் தொடச்சியாக நடந்த போராட்டமும் மாணவர்களை இரண்டு அரசியல் அணியாக அணிதிரட்டியது. இதன் வளர்ச்சி 1986 இறுதியில் மக்கள் சார்ந்த அரசியல் போராட்டத்தை முன்னோக்காகக் கொண்ட, மக்கள் திரள் போராட்டத்துக்குள் யாழ் பல்கலைக்கழகத்தைச் இட்டுச்சென்றது.

-தொடரும்-



# செயற்கை நுண்ணறிவு

செயற்கை நுண்ணறிவானது இன்றைய நாளின் முதன்மை தொழில்நுட்பம் ஆகும். இது வங்கி அமைப்புகளில் (Systems) கடனட்டை மோசடி முயற்சிகளை கண்டறியப் பயன்படுவது முதல், தொலைபேசிகளில் உள்ள குரல் அறிதல் (Voice recognition) தொழில்நுட்பம், சிக்கல்களின் போது அவற்றை அவதானித்துத் தகுந்த ஆலோசனை குறிப்புகளை வழங்கும் மென்பொருள் அமைப்புக்கள் வரை பல துறைகளிலும் பல வகைகளில் பயன்பாட்டில் உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ச்சியாக நடத்தப்பட்ட அடிப்படைச் செயற்கை நுண்ணறிவு சார்பான ஆய்வுகளின் பலனாகவே மேற்கூறியவாறான தொழில்நுட்பங்கள் இன்று கைகூடி உள்ளன. செயற்கை நுண்ணறிவின் சில தூய பயன்பாடுகளான (Applicstions) தொழிற்துறை ரோபோக்கள் இன்று பாவனையில் உள்ள போதிலும் தனித்தியங்கும் பயன்பாடுகள் (Standalone Applications) இன்னும் பாவனையில் இல்லை என்றே கூறலாம் எனினும் அதற்குப் பதிலாக நுண்ணறிவு மற்றும் தர்க்க அறிவை ஏற்கனவே பாவனையில் உள்ள பயன்பாடு தரவுத்தளம் (Datbase) மற்றும் சூழலுக்கு சேர்ப்பதன் மூலம் அவற்றை நட்பாகவும், புத்திசாலித்தனமாக அடையக்கூடியதாகவும் பாவனையாளர்களின தூண்டலுக்கு ஏற்ப துலங்கலை வழங்கக் கூடியதாகவும் அமைக்கப்பட்ட பயன்பாடுகள் பாவனையில் உள்ளன. ஒரு பயன்பாட்டின் செயற்கை நுண்ணறிவுப் பகுதியானது ஒருகணிசமான உட்கட்டமைப்பைச் சார்ந்த பொதுவான ஒரு பெரிய அமைப்பாகும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சி மற்றும் உருவாக்கல் துறையானது மேற்கத்தேய நாடுகளின் தற்போதைய இராணுவ மற்றும் பொதுமக்களின் வளர்ச்சிக்குப் பாரிய பங்காற்றியுள்ளதுடன் இந்த தசாப்தத்தில் நடைபெற்று வரும் அடிப்படை ஆராய்ச்சி முயற்சிகள் மேலும் சுவாரசியமான எதிர்கால திறன்களை அடைய வழிசமைக்கும்.


செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தின் வியத்தகு மைல் கற்களுக்கு எடுத்துக்காட்டாக கீழ்வரும் உதாரணங்களைக் கூறலாம்.

1)கணினி சதுரங்கம் (Computer chess) டீப் புளு (Deep blue) எனும் ஐ.பீ. எம் (I.B.M) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சதுரங்க கணினியானது உலக சாம்பியன் ஆன கரி கஸ்பரோவை (Garry Kasparov) தோற்கடித்தது.

2) கணிதத்திற்குரிய தேற்றம் நிறுவல் அர்கன் (Argonne) தேசிய ஆய்வுகூடத்தில் உள்ள கணினி அமைப்புக்கள் மனிதர்களால் தீர்க்கப்பட வேண்டும் என கருதப்பட்ட அல்ஜீப்ரா (Algebra) பற்றிய ஒரு நீண்ட கால ஊகத்தை நிரூபித்தது.

3)அறிவியல் வகைப்பாடு நாசா (NASA) அமைப்பானது நிபுணர்களினால் வகைப்படுத்தப் பட்ட உதாரணங்களைக் கற்பதன் மூலம் விண்மீன் அல்லது பால்வெளிகளை மிக மெல்லிய சமிக்ஞைகளிற்கு ஏற்ப மிகத்துல்லியமாக வகைப்படுத்தக் கற்றுக்கொண்டது.

4) மேம்பட்ட பயனர் இடைமுகங்கள்(Avanced User Interfaces) பிகாஸஸ்(Pegasus) ஆனது ஐக்கிய அமெரிக்க விமானப்போக்குவரத்து நிறுவனத்தின் ஈசி ஸப்ரே (Easy Sabre) இட ஒதுக்கீட்டு அமைப்பில் சம்பந்தப்பட்ட பேச்சு மொழி இடைமுகம் ஆகும். இது சந்தாதாரர்கள் விமானம் பற்றிய தகவல்களைப்பெறவும்இ தொலைபேசி மூலம் அல்லது தங்களது தனிப்பட்ட கணினி மூலம் ஒரு பெரிய உடன் நிகழ் (Online), இயங்குநிலை (Dynamic) தரவுத்தள வழியாக விமான இட ஒதுக்கீடு செய்யவும் அனுமதிக்கின்றது.செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது மனித வாழ்வைப்பற்றிய சில அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வண்ணம் ஆரம்பித்து இன்று வர்த்தகம் மற்றும் சமூகத்தின் பல அம்சங்களை மேன்மைப்படுத்தும் ஒரு அறிவியல் தொழில்நுட்பமாக வளர்ச்சி யடைந்துள்ளது. இத் தொழில்நுட்பம் மனிதனின் நாளாந்த வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாக காணப்பட்ட போதிலும் தன்னியக்க நுண்ணறிவு (Automating Intelligence) தொழில்நுட்பத்தின் வளர்ச்சியிலேயே இன்னும் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.



மனித அறிவு மற்றும் அனுபவத்தை குறியாக்கம் (Encoding) செய்வதன் மூலம் இயற்கை மொழியை (Natural language) அறிந்து கொள்ளவும், அதற்கேற்ப பதிலளிக்கக் கூடியதுமான அமைப்புக்களை உருவாக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் முதன்மை இலக்குகளாகப் புதிய தொழில்களில் ஏற்படக்கூடிய நடைமுறை விளைவுகள், ஏற்கனவே உள்ள அமைப்புக்களின் செயற்பாடுகளை மேம்படுத்தல், பொது உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைத் தர முன்னேற்றம் என்பவற்றை கூறலாம். இத் தொழில்நுட்பத்தைச் சகல துறைகளிலும் தகுந்த முறையில் உட்புகுத்துவதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அதிலிருந்து உலக முன்னேற்றத்திற்கும் வழிசமைக்கலாம்.

**தி.ஜனாகரன்**
**கல்வியாண்டு-2009/2010**
**பிரயோக விஞ்ஞான பீடம்**
**சபரகமுவ பல்கலைக்கழகம்**

# நம்பிக்கை

"ஒருவன் மனதுக்குள் என்ன நினைக்கின்றானோ அப்படியே அவன் விளங்குகின்றான்"
-பைபிள்-

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் தமக்குரிய எல்லா இடர்களையும் வெற்றி கொண்டுதாம் வேண்டியதைப்பெற்று சாதனைகள்பல புரிவதற்கு அவர்களிடமிருந்த மகத்தான சக்தி நம்பிக்கையேயாகும். "நம்பிக்கைக்குப் படைக்கும் திறன் உண்டு" இக்கருத்தை பல உளவியல் நிபுணர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். வரலாற்றில் இடம்பெற்ற பல மேதைகளும் தத்துவ ஞானிகளும் அறிஞர்களும் நம்பிக்கையின் சக்தி யைப் பயன்படுத்தி முன்னேறியவர்கள் ஆவர். பெரும்பாலான மனிதர்கள் தோல்வி எதிர்ப்பட்டதும் தமது முயற்சிகளைக் கைவிட்டு நம்பிக்கை இழந்து சோர்ந்து விடுகின்றனர். வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் தம் சொந்த ஆற்றல் மீது தீவிர நம்பிக்கை கொள்ள வேண்டும். நாம் எம் சக்தியின் மீதும் திறமையின் மீதும் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கின்றோமோ அந்த அளவிற்கே நமது ஆற்றல்களை நாம் வளர்த்துக்கொள்ள முடியும். தனது ஆற்றல் மீது தீவிர நம்பிக்கை கொண்டு ஒரு மனிதன் ஒரு காரியத்தை செய்யும் போது தனது சக்தியில் முழு நம்பிக்கை கொண்டு அக்காரியத்தை செய்யும் போதும் அதை அவனால் நிச்சயமாக செய்ய முடியும். ஒவ்வொரு மனிதனும்தனது தகுதியை தனது கண்கள் மூலம் வெளிப்படுத்துகின்றான். ஒருவரது கண்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அவன் தன் இலட்சியத்திலும் தன்னிடத்திலும் என்னால் முடியும் என்று சொல்லும் ளவிற்கு தீவிரம் அடையும் போது வெற்றிக்கான பயிற்சியையும் நாம் பெற்று விடுவோம். அப்போது நாம் செய்யும் சாதனைகளுக்கு எல்லையே கிடையாது. தோமஸ் அல்வா எடிசன் ஏனைய மனிதர்களைக் காட்டிலும் அதிகமாக தோல்விகளைத் தழுவினார். இதன் மூலம் பெற்ற அனுபவ அறிவைக கொண்டு எல்லா மனிதர்களைக் காட்டிலும் அதிகமாக வெற்றி பெற்று 1093 கண்டு பிடிப்புக்களை மேற்கொண்டார். தோல்விகள் மூலம் வெற்றியடைய முடியும் என எடிசன் தீவிரமாக நம்பினார். அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் அஹிம்சை வழியில் விடுதலை பெற்றுத் தந்த மஹாத்மா காந்தி, மேரி கியூரி அம்மையார் போன்ற பலர் இத்தகைய வெற்றியாளர்கள். கல்வித் துறையில் பெரும் சாதனை புரிந்த ஹெலன் கெல்லருக்கு காது கேட்காது, வாய் பேசாதவர், கண் தெரியாது. இவர்கள் அனைவரும் தீவிர நம்பிக்கையின் காரணமாக சாதனை புரிந்தவர்களாயினர்.

நமது வெற்றியில் நமக்கு நம்பிக்கை மேலும் மேலும் தீவிரமாக நமது வெற்றிக்கு என்னென்ன தேவையோ அனைத்தும் படிப்படியாக தானாகவே கிடைக்கும். எமது நம்பிக்கை தீவிரமாக மாற அது எமது வாழ்க்கை கண்ணோட்டத்தையே மாற்றிவிடும்.

**" முடியாது என்பது முட்டாள்தனம்**
**முடியுமா என்பது மூடநம்பிக்கை**
**முடியும் என்பதே மூலதனம்**
**முயற்சி செய்தால்**
**முடியாதது எதுவுமில்லை "**

எனவே நாமும் முயற்சியுடன் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

சு.சஞ்ஜீவ் காந்த்
கல்வியாண்டு-2008/2009
பூகோள விஞ்ஞான பீடம்
சபரகமுவ பல்கலைக்கழகம்

# கொலைக்களத்திலிருந்து ......

**1985 ம் ஆண்டு சிறிலங்கா சிறைகூடங்களில் ஈழ மாணவர்களும்; இளைஞர்களும் கொன்று குவிக்கப்பட்டு கொண்டிருந்த வேளை சிறையிலிருந்து மாணவன்-ஒருவன் எழுதிய கடிதம்**

அனைத்து பல்கலைக்கழக மாணவர்களிற்கும்

இக்கடிதத்தினை
மிகவும் இக்கட்டான சூழ்நிலையில்
எழுதுகின்றேன். எம் மீது திணிக்கப்பட்டுள்ள சட்டங்கள் மி-
கவும் கொடுமையானவை. அதைவிட இப்போது புதிய
புதிய சட்டங்களை உருவாக்கி தம்மிஷ்டம் போல் எம்மிடம்
திணிக்கின்றார்கள். அதற்கும் மேலாக சட்டங்களையும் மதியாது
18 மாதங்கள் கடந்துள்ள முடிந்த பின்பும் இங்கு சிலரைத்
தடுத்து வைத்துள்ளனர். அவர்களுக்கெதிராக வழக்கோ அல்லது
வேறு எவ்வித நடவடிக்கைகளுமோ எடுக்காது 18 மாதங்கள்
முடிந்த பின்பும் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் இதுபற்றி நிர்வாகத்திற்கும், மேலிடங்களிற்கும்
அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
இதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு எங்கள் கோரிக்கை
நிறைவேறும் வரை 8-8-1985 தொடக்கம் சாகும் வரை
உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்க உள்ளோம் என்பதை
நீண்ட இடைவெளி கொடுத்து அறிவித்தும் அதற்கு எவ்வித
முடிவும் கிடைக்கவில்லை. மேற் கூறியப்படி 8-8-85 தேதி
போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கோரிக்கை, விசாரணை
முடிந்தவர்களை விடுதலை செய் அல்லது விசாரணை செய்.
இதில் இரண்டிரண்டு பேராக போராட்டத்தில் குதிக்கின்றனர்.
கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும்.
இப்போராட்டத்தில் முதற்கட்டமாக பேராதனைப் பல்கலைக்கழகம்
82/83 கல்வியாண்டு விஞ்ஞான மாணவன் சுரேஷ், யாழ்பாணத்தை
சேர்ந்த செல்லத்துரை கனகரத்தினம், மலையகத்தை சேர்ந்த
வவுனியாவில் வசிக்கும் கருணாகரன் என்பவர்களும் 8-8-
85 தொடக்கம் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனைத்
தொடர்ந்து நாங்கள் இருவர் இருவராக குதிக்கவுள்ளோம்.
இதற்கு ஆதரவாக பல்கலைக்கழகங்களும் போராட்டம் நடத்த
வேண்டுமென சிறைக்கைதிகளாகிய ஏனையோரும், நாமும்
எதிர்பார்க்கின்றோம். வெகுசனங்களும் போராட்டத்திற்கு
ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களை நடத்தவும். வேறு
விசேடமில்லை முடிக்கிறேன்.

9-9-85

இவ்வண்ணம்.

# ஊமை உள்ளம்

இயற்கை அன்னையின் உறைவிடம் மலையகம்
அங்குள்ள துயரம் சொன்னால் தாங்காது உன் – அகம்
வளர வளர வெட்டப்படும் அதிகம் வளர்ந்த – நகம்
வளர்ந்தாலும் நீங்காது எம் உள்ளத்தின் – சோகம்

எம்மக்களுக்கு வாழ்க்கை தருவது தேயிலைத்தோட்டம்
அதனையும் அழிக்கிறது சில அசுரக்கூட்டம்
வாழ்வதற்கென வாழும் உரிமையைத் தருகிறது சட்டம்
அதனை அறிவதிலும் எமக்கு இல்லை நாட்டம்

தேயிலை மலையிலே தேயிலையால் நிறையும் கூடை
ஆனால் எம் உழைப்பைக் கெடுக்கும் பனிவாடை
உடம்பை மறைக்க மட்டுமே நம் கிழிந்த ஆடை
நம் முக்கால் வயிற்றை நிறைக்கும் நீர் நிறைந்த ஓடை

நம் தேசிய உணவாக இருக்கின்றது ரொட்டி
கோதுமை விலையேற்றத்தைக் காட்டியது சுவரொட்டி
அன்றுமுதல் வெறுமையானது நம்வீட்டு மாச்சட்டி
உணவின்றி நாம் கிடந்தோம் வயிரொட்டி

மலையிலே காலைப் பதம்பார்க்கும் அட்டை
கிழிந்து கிடக்கிறது பெண் பிள்ளையின் சட்டை
மாலையில் ஆடவனுக்கு மதுக்கிண்ணமாகும் சிரட்டை
பின் மனைவி, பிள்ளையை பதம்பார்க்கும் விறகுக்கட்டை

விலையேற்றத்தால் இல்லை சீரான சாப்பாடு
குடிகாரக் கணவனால் அவன் குடும்பம் படும்பாடு
ஆனால் யாரும் போடுவதில்லை கூப்பாடு
நீயாவது முடிந்தால் நம் துயரைப் பாட்டாய்ப்பாடு

காலிலே போடுவதற்கு இல்லை செருப்பு
கவலையும் எம்மைவிட்டுச்செல்ல காட்டவில்லை விருப்பு
எமக்கு சம்பள உயர்வு தர எவரும் காட்டினர் வெறுப்பு
எம் பிள்ளைகளுக்கு கிட்டவில்லை அடிப்படைப் படிப்பு

விலங்குகளுக்கென உண்டு உறைவிடமாகக் காடு
தமிழனுக்கென இல்லை ஒரு தனி நாடு
பறவைகளுக்கென உண்டு தனக்கென ஒரு கூடு
ஆனால் எமக்கில்லை வாழ்வதற்கென தனி ஒரு வீடு

மனிதனின் தேவைகள் உடை, உறையுள், உணவு
இவைகள் கூட எம்மைப் பொறுத்தமட்டில் கனவு
போராடி இவற்றைப்பெற எமக்கில்லை துணிவு
உதவிடவும் யாருக்கும் எம்மீது ஏற்படவில்லை கனிவு

மலையகத்தானுக்கு இல்லை கைநிறையப் பணம்
ஆனால் அவனிடம் கொட்டிக்கிடக்கிறது சிறந்த குணம்
நாளை எம் வாழ்வில் உழைப்பால் வீசும் மணம்
எம்மைத் தூற்றுவோர் தலை கவிழ்ந்து கொள்வர் நாணம்

காட்டைத் தோட்டமாக்கியதால் நாமானோம் தோட்டக்காட்டான்
எம் துன்பம் பற்றி அறியமாட்டான் நம் நாட்டான்
பின் எம்மைப்பற்றி எப்படி அறிவான் வெளி நாட்டான்
எமக்கென்று நன்மை எதனையும் எவனும் செய்யமாட்டான்

வந்தது தொடர்ந்தது பலவகைத் தேர்தல்
ஒன்றாலும் நம் வாழ்வில் ஏற்படவில்லை மாறுதல்
இனியும் எமக்கில்லை எதிலும் சோர்தல்
நமக்கு நாமே தோள் கொடுக்கும் ஆறுதல்

நீரின் வேகத்தை குறைக்கும் கட்டிய அணைக்கட்டு
உன் உரிமையைப்பெற சட்டமன்றத்தைத் தட்டு
இடையூறு செய்யும் புல்லுருவிகளை மதிகொண்டு வெட்டு
இயலாவிட்டால் உன் உணர்ச்சிகளை வார்த்தையாகக் கொட்டு

அதனைப்படித்து தன்னிலை அறியும் உன் வாரிசு
அது மலையகத்தானுக்கு நீ தருகின்ற அரிய பரிசு
இவை எதுவும் இல்லாவிட்டால் நம் வாழ்வாகும் தரிசு
அதுவே மலையக அன்னைக்கு நீ தரும் பெரிய பரிசு

எம்மவர்கள் மனதில் உள்ளது எண்ணற்ற காயம்
இருப்பினும் குட்டக்குட்டக் குனிவதில் என்ன நியாயம்
போராடு வெளுத்துவிடும் பசுப்புலியின் நியாயம்
தாக்கவந்த துன்பக்கணைகள் ஆகிவிடும் மாயம்

நாம் நடக்கும் பாதையெங்கும் உண்டு மேடு பள்ளம்
அணைக்கட்டு அமைத்துவிட்டால் அடங்கும் வெள்ளம்
உன் பிரச்சினைகளை தூரத்தில் வைத்தால் அவையாகும் குள்ளம்
ஆனால் இவ்வுண்மைகளை வெளியே எடுத்துரைக்க
மறுக்கும் ஊமை உள்ளம்

நா.சுதர்ஷினி
கல்வியாண்டு 2009/2010
சமூக விஞ்ஞானங்கள் மொழிகள் பீடம்
சபரகமுவ பல்கலைக்கழகம்

## தர்ம போதனை

டாங் டாங் டாங்..... !

டொம் டொம் டொம் ....?

## இ(ல்லாத) – குடும்பம்

அண்ணா facebook இல்
அக்கா phone இல்
அப்பா e-mail இல்
அம்மா skype இல்
நாங்கள் குடும்பத் இல்
கதைப்பது சிலநேரத்தி இல்

## தீடீர் பரீடசை

திங்கட் கிழமை மாலை
பரீட்சை - தீடீர் அறிவிப்பு -
தீவிர விசாரித்தில் தெரிந்தது
தில்லானா மோகனம்பாளுக்கும்
தில்லுமுல்லு Deen க்கும்
.......... என்று toilet யில்
எழுதிவிட்டார்களாம்.... !

# இலவச கல்விக்கான போராட்டம் எதிர்கொள்ள போகும் சவால்கள்


கல்வி உரிமைக்காக விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள், அரசியல் கட்சியினர் என குறித்து அடையாளப்படுத்தக் கூடிய பலர் போராடி வருகின்றனர். இவ் வெவ்வேறு பிரிவினரும் கல்வித்துறை பிரச்சினையை விளங்கிக் கொள்ளும் முறை, தீர்வை தேடும் விதம், அதற்காக அமைப்பு ரீதியான ஒழுங்கு படுத்தல்கள் வெவ்வேறு விதமானவை.


குறிப்பாக கல்வித்துறை பிரச்சினைகளிற்காக என்றும் போராடிவரும் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களை மீள திரும்பி பார்க்கும் போது கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் உண்டு.

கல்வித்துறை சிக்கல் தொடர்பாக மாண-வர் இயக்கம் முன்னெடுத்த போராட்டங்கள், அநேகமாக குறிப்பிட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட போராட்டங்களாகும். தனியார் பல்கலைக்கழகம், கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைப்பு போன்றவனவற்றிற்கு எதிரான போராட்டங்கள் மூலம் இதனை தெளிவாக விளங்கலாம். இப் போராட்டங்கள் எதிர்காலத்திலும் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அதேநேரத்தில் கல்வி தொடர்பாக விரிவான கலந்துரையாடல் தொடர்ச்சியான முறையில் சமூகப்படுத்தப்படவில்லை. சிற்சில சமயங்களில் முயற்சிக்கப்பட்டாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவில்லை
அதே போல் இலவச கல்வி உரிமையை பாதுகாக்க அதிக கவனம் செலுத்தப்பட்டாலும் கல்வி சம உரிமையை வென்றெடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. கல்வி நிறுவனங்கள் அரசின் கருத்தியலை சமூகத்தில் உள் நுழைக்கும் கருவிகள் என்பதை அம்பலப்படுத்தாமை பெரும் குை-றயாகும். அதே போல் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் சிக்கலினால் பெற்றோர்கள், மாணவர்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள சிக்கல் தொடர்பாக கவனம் செலுத்தப்படவும் இல்லை. இதன் காரணமாக வரையறைகளிற்கு உட்பட்டுள்ளமைக்கு எதிராகவும் போராட வேண்டிய நிர்பந்தம் எமக்கேற்பட்டுள்ளது.
பகிடிவதையும், பல்கலைக்கழ மாணவர்களிற் கிடையிலான மோதல்களும் மாண-வர் இயக்கம் தொடர்பாக சமூகத்தில் எதிர்மறையான கருத்தை ஏற்படுத்துவதற்கு அரசினால் கையிலெடுக்கப்பட்டுள்ள இரண்டு விடயங்களாகும். அநேகமான குற்றச்சாட்டுகள் போலியானவை. எனினும் பல்கலைக்கழக துணை பண்பாடு (Sub-culture) தொடர்பாக நாம் மீளவும் சிந்திக்க வேண்டும். பல்கலைக்கழக துணைக் பண்பாட்டில் நிறைந்துள்ள விஞ்ஞானத்திற்கு முரணான, பிற்போக்கான, தான்தோன்றிதனமான விடயங்களை சீர் செய்ய அமைதியான முறையிலான தலையீடு அவசிய-மானதாகும். இதற்கு மாணவர் இயக்கம் தலைமைதாங்கி செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.


ஆட்சியாளர்கள் தங்கள் பொய் பிரச்சாரத்திற்கு ஊடகங்களையே பயன்படுத்துகின்றனர். ஜனாதிபதி மாளிகையில் மாதந்தோறும் நடைபெறும் விருந்துபசாரத்திலும் மது விருந்திலும் கலந்துகொள்ளும் ஊடக ஐயாமார்கள் உண்மை தகவல்களை சமூகத்திற்கு கொண்டு செல்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. அவர்களுக்கு ஏரா-ளமான உதவிகளும், பதவிகளும் கிடைக்கும். ஜனாதிபதியினால் எவ்வித தொந்தவரம் நேராது. ஜனாதிபதிக்குக் கோபத்தை வரவழைக்காத வகையில் மக்களுக்கு தகவல்களை வழங்குவதே அவர்களின் பணியாகும். சில ஊடகவியலாளர்களும் பிரமுகர்களும் இவ்வாறு இல்லை என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். எவ்வாறாயினும் மக்களுக்கு உண்மையான தகவல்களை கொண்டு செல்வது கல்வி உரிமைக்காக போராடும் தரப்பினருக்கு இருக்கும் மிகப் பெரிய சவால-ாகும். அதற்கு ஒரே வழி தான் இருக்கின்றது. மக்களிடம் நெருங்கி செல்வதும், அவர்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதுமே ஆகும். மக்களின் பிரச்சினைகளுக்கா முன் நிற்பதும், அவர்களுக்காக குரல் கொடுப்பதன் மூலமும் மக்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டிய வரலாறு மாணவர் இயக்கத்திற்கு உண்டு. அதன் மூலமே மக்களுடன் மிக நெருங்கிய தொர்புகளை, மிக உறுதியான தளத்தை உருவாக்கிட முடியும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு இவ்விடயத்தில் அதிகமான சவால்கள் காத்திருக்கின்றன. விரிவுரையாளர்கள் தங்களது போராட்ட கோசத்தினை விரிவுபடுத்தியிருப்பது குறிப்பிட தக்க விடயம் எனினும், அவ் போராட்ட கோசத்தில் சில முரண்பாடுகள் காணப்படுகின்றன. விரிவுரையாளர்கள் சங்கம் ஆரம்பித்த போராட்டங்கள், சம்பள பிரச்சினையுடன் மட்டும் எவ்வகையிலும் மட்டுபடுத்த பட்டிருப்பின், மாணவர்களின் நிய-ாயமான போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கா நிலைக்கு அவர்கள் செல்வார்கள் எனின் அது முரண்பாடான பயணமாக மாறிவ-ிடும். ஐரோப்பிய நாடுகளில் போராட்டங்களில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஒன்றிணைந்தே போராடுவது இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். மக்களை தற்போதைய நிலையிலிருந்து முற்போக்கானதொரு நிலைக்கு நகர்த்தி செல்லும் பணியை விரிவுரையாளர்களினாலேயே செய்ய முடியும். இந் நாட்டின் பெற்றோர்களுக்கும் மிக பெரிய கடமையொன்று உள்ளது. தான் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் தினந்தோறும் விடைதேட போரா-டுவதை விடுத்து சமூகமாக ஒன்றிணைந்து சமூக முறைமைக்குள் விடைதேட முன்வர வேண்டும். பெற்றோர் - ஆசிரியர் கூட்டங்களில் அமைதியாக இருந்து, கேட்கும் கட்டணங்களை எல்லாம் செலுத்திவிட்டு வருவதற்கு பதிலாக அக்கூட்டங்களில் குரலெழுப்புவதன் மூலம் இதனை ஆரம்பிக்க முடியும்.
ஆகவே கல்வி உரிமையை வென்றெடுக்க அமைப்பு ரீதியாக ஒன்றுபடுமாறு மக்களை கோருகின்றோம். அதை செய்யாவிடின் நாம் மேலும் மேலும் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடும்.



சில எழுத்துக்கள் நம் ஆன்மாவை நிறைத்து வாழ் நாள் முழுவதும் நம்முடன் பயணிக்கும்.கிர்கிஸ்தானிய எழுத்தாளர் சிங்கிஸ் ஐத்மாத்மாதவ்வின் எழுத்துக்கள் அப்படிப்பட்டவை. அன்னை வயல்,ஜமீலா,குல்சாரி,முதல்ஆசிரியர் என இவரின் படைப்பக்கள் அனைத்தும் ஆன்மாவை அடைத்து நிற்பவை. அதில் “முதல் ஆசிரியர்” இவரின் உலகை உலுக்கிய படைப்புகளில் ஒன்றாகும். மிக சாதாரண தனி மனிதர்களின் எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காத உழைப்பிலும், எல்லா இடையூறுகளையும் சாமாளிக்கும் அவர்களின் மன உறுதியிலும் சமூகம் வெளிச்சம் பெறுகிறது. அந்த சாதாரண மனிதர்கள் (ஆனால் உண்மையில் அசாதாரண மனிதர்கள்) வெளிச்சம் பெறுவதே இல்லை. அல்லது வெளிச்சத்தின் பகட்டு அவர்களுக்கு பிடிப்பதில்லை. முகமறியா அந்த சாதாரண மனிதர்களின் தாகம் சமூகத்தின் நீரூற்றாக இருக்கிறது! “முதல் ஆசிரியர்” அப்படியொரு நீரூற்றின் கதையை சொல்கிறது. அப்படியொரு சாதாரணமானவனான தூய்ஷனின் தாகத்தையும் அந்த தாகத்தில் ஊற்றெடுத்த அல்டினொய் என்ற நீரூற்றையும் அவர்களிடையே இழையோடிய தூய்மையான அன்பையும் கூறுகிறது. அதனை மாணவர்குரல் தொடர்ச்சியாக இங்கு பிரசுரிக்கிறது.



என்னுடைய சொந்த கிராமத்திலிருந்து கடந்த இளவேனிற் காலத்தின்போது ஒரு தந்தி வந்தது கூட்டுப்பண்ணை விவசாயிகள் தாங்களாக தங்கள் கையாலேயே கட்டி முடித்த பள்ளிக்கூடத் திறப்புவிழாவுக்கான அழைப்பிதழ் தான் அது. நான் போவதென்று உடனே முடிவு கட்டிவிட்டேன். எங்கள் ஊரில் நடக்கும் அவ்வளவு முக்கியமான ஒரு நிகழ்ச்சியை நான் தவறவிட முடியுமா? நான் சில நாட்களுக்கு முன்னதாகவே வந்து விட்டேன். ஏனெனில் நான் அந்த கிராம பகுதிகளில் சுற்றியடித்து அந்த வட்டாரத்தை வைத்து ஓவியம் தீட்ட நினைத்திருந்தேன். கல்வித்துறை அறிஞர் அல்டினோய் சுலைமனோவாவும் அதற்கு அழைக்கப்பட்டிருப்பதாக எனக்குச் சொல்லப்பட்டது. இரண்டு நாட்களாவது கிராமத்தில் தங்கிவிட்டு அதற்கு பிறகு அவர் மாஸ்கோ செல்லக்கூடும் என்று சொன்னார்கள்.

இந்தப் பெருமை சான்ற பெண்மணியார் சின்னஞ்சிறு குழந்தைப் பருவத்திலேயே எங்கள் கிராமத்தை விட்டு போய்விட்டார் என்பதை நானறிவேன். நானும் ஒரு நகரத்து ஆளாக மாறிய பிறகு அந்த அம்மையாரை ஒரு நாள் சந்தித்தேன். இப்பொழுது நடுத்தர வயதை அவர் தாண்டி விட்டார். கட்டுமஸ்தான உடலமைப்புடைய அந்த அம்மாவின் கருநிறக் கூந்தலில் நரையும் பஞ்சமில்லாமல் இருந்தது. பல்கலைக்கழகத்தில் ஒரு துறைக்கு தலைவராக இவர் விளங்கினார். பல்கலைக்கழகத்தில் தத்துவ விளக்க வகுப்புகள் நடத்தி வந்தார். அகாடமியிலும் வேலை செய்துவந்தார். அடிக்கடி பிற நாடுகளுக்கும் போய் வந்தார். சுலைமனோவா அதிகமான வேலையை உடையவர். எனவே அவரைப் பற்றி நான் அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் நான் அவரைச் சந்தித்தபோதெல்லாம் எங்கள் ஊர்ச் செய்தியைப் பற்றிக் கேட்காமலிருக்க மாட்டார். ஏதாவது ஒருசில வார்த்தைகளாவது என்னுடைய புதிய ஓவியத்தைப் பற்றியும் சொல்லாமல் விடமாட்டார். ஒரு நாள் துணிச்சலை வரவலைத்துக் கொண்டு அம்மா அல்டினாய் சுலை மனோவா, நீங்கள் ஏன் கிராமத்தில் போய் ஒருநாள் கூடத் தங்க போவதில்லை? அவர்கள் உங்களைப் பற்றி எவ்வளவு பெருமைப்படுகிறார்கள் தெரியுமா? ஆனால் உங்களைப் பற்றி எல்லாமே கேள்விப்பட்ட செய்திகள் தான். நீங்கள் ஒரு நாள் கூட குர்க்குரீ கிராமத்துக்கு வராத காரணத்தால், நீங்கள் அந்த கிராமத்து மக்களைப் பற்றி தெரிந்து கொள்ளவே விரும்புவதில்லை என்று அவர்கள் முணுமுணுக்கின்றார்கள் என்று சொல்லி விட்டேன்.

ஆமாம் ஒரு தடவையாவது என்றாவது ஒருநாள் அங்கு போய் தான் ஆக வேண்டும், என்று புன்னகையோடு சொன்னார். குர்க்கரீ கிராமத்தை பார்க்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கனவு கண்டுகொண்டிருக்கிறன். நான் பல ஆண்டுகளாக அங்கு போனதே இல்லை. குர்க்குரீ கிராமத்தில் எனக்கு சொந்தக்காரர்களே இல்லை என்பது உண்மை தான். ஆனால், அதைப் பற்றிக் கவலை இல்லை. நான் கூடிய கூடிய சீக்கிரம் அங்கு போகத்தான் போகிறேன். வீட்டுக்குப் போகவேண்டும் என்ற ஏக்கமே என்னை பிடித்துக் கொண்டுவிட்டது என்று அந்த அம்மா சொன்னார்கள்.

நிகழ்ச்சி தொடங்கபோகிற நேரத்தில் அந்த அம்மையார் வந்து சேர்ந்தார்கள். புதிய பள்ளிக்கூடத்தில் கூடியிருந்தவர்கள், அந்த அம்மா காரில் வருவதை ஜன்னல்கள் வழியாக எட்டிப்பார்த்தார்கள். நண்பர்கள் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், இளைஞர்கள், கிழவர்கள் எல்லோருமே அந்த அம்மையாருடன் கைகுலுக்க விரும்பினார்கள். அல்டினாய் சுலைமானோவா அம்மையார் அப்படிப்பட்டதொரு வரவேற்பை எதிர்பார்த்திருக்கவில்லை என்று நினைக்கின்றேன். இந்த வரவேற்பு அவரை கூச்சப்பட வைத்துவிட்டது. மார்பில் கையை வைத்து அழுத்தியவாறே, இடபக்கமும், வலபக்கமும் சாய்ந்து, வணக்கம் செலுத்திக் கொண்டே, மேடையில் போடப்பட்டிருந்த மேசையை நோக்கி நடந்தார்.

அல்டினாய் தனது வாழ்நாளில் பல கூட்டங்களையும் பார்த்திருக்க கூடும். எல்லா இடங்களிலுமே நட்புணர்வுடனான வரவேற்பையும், உபசரிப்பையும் பெற்றிருக்க கூடும். ஆனால், இங்கு கொடுக்கப்பட்ட வரவேற்பு உள்ளத்தை தொடுவதாக இருந்ததால் அவரது கண்களில் நீர் ததும்பிவிட்டது.

பேச்சுக்கள் முடிந்தவுடன், முன்னோடி வாலிபர் குழு ஒன்று, அல்டினோய்க்கு பூச்செண்டையும் , செந்நிற கூடைகூ ஒன்றையும் வழங்கினார்கள். அதன் பின்னர் விருந்தினர் எழுதும் புத்தகத்தில் அந்த அம்மையாரை முதன் முதலாக எழுத சொன்னார்கள். இதையடுத்து குழந்தைகளின் கத்துக்குட்டி நிகழ்ச்சிகள் சில நடைபெற்றன. அது ரொம்பவும் ருசியாக இருந்தது. அதன் பின்னர் தலைமையாசிரியர் தன் இடத்திற்கு வருமாறு எல்லோருக்கும் அழைப்பு விடுத்தார்.

விருந்தாளிகளும், விருந்தளிப்பவர்களும் அல்டினாயைப் பார்க்க முடியாமல் திண்டாடினர். அல்டினாய்க்கு மரியாதை காட்டுவதில் மிகவும் கவனத்தோடு இருந்தனர். கம்பளம் விரிக்கப்பட்டிருந்த இடத்தில் அந்த அம்மையாருக்கு இடம் விட்டு நின்று தாங்கள் காட்டும் மரியாதையை தெரிவித்தனர். கூட்டம் ஓரே கூச்சலாகவும், குழப்பமாகவும் இருந்தது. இப்படிப்பட்ட கூட்டங்கள் எல்லாமே, ஓரே சத்தமாகவும், ஒருவொருவருவர் விருந்துபசார பேச்சாகவும் இருப்பதும் வழக்கம் தானே!

கிராமத்து இளைஞன் கைநிறைய கட்டுத் தந்தியைக் கொண்டுவந்து தலைமையாசிரியரிடம் கொடுத்து விட்டுப் போனான். அந்தக் கிராமததின் பழைய மாணவர்கள் பலர், கூட்டுப் பண்ணையாளர்கள் தாங்களாகவே பள்ளிக்கூடத்தைக் கட்டி முடித்ததைப் பாராட்டி வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தார்கள். தந்திகள் கைமாறி எல்லோரும் வாங்கி படித்தனர்.

'யார் பெரியவர் தாய்சனா இந்த தந்திகளைக் கொண்டு வந்தார்?' என்று அந்த இளைஞனிடம் தலைமையாசிரியர் கேட்டார்.

ஆமாம்! எல்லோரும் கேட்கிறாற் போல், இந்த தந்திகள் கூட்டத்தில் வாசிக்கப்பட வேண்டும் என்பதற்காக, குதிரையை சவுக்கிக் கொண்டு வந்தாராம். நம்முடைய தபால்காரர் கொஞ்சம் பிந்திவிட்டார். ஆனால் பாவம் ரொம்பவும் களைத்துப் போயிருக்கார் ' என்றான் இளைஞன்.

கூஅவர் ஏன் வெளியே நின்றுகொண்டிருக்கிறார். அவரை உள்ளே வரச்சொல்லுங்கள்கூ என்றார் தலைமையாசிரியர்.

தூஷ்யனை அழைப்பதற்காக அந்த இளைஞன் வெளியில் போனான். என் அருகில் அமர்ந்திருந்த அல்டினாய், ஏதோ திடீரென்று நினைத்துக் கொண்டவரைப் போல, எந்த தூய்ஷினை பற்றிப் பேசுகின்றார்கள் என்று என்னிடம் கேட்டார். அவர் கேட்ட முறையும், அவரது தொனியும் எனக்கு ரொம்பவும் விநோதமாய் பட்டது.

கூஅவர் தான் தபால்காரர், பெரியவர் தூய்ஷினை உங்களுக்கு தெரியுமா?கூ என்று கேட்டேன்.

லேசாக தலையை ஆட்டிவிட்டு, மேசையை விட்டு எழத்தொடங்கினார். அதே நேரத்தில் கிடுகிடுக்கும் குளம்போசை கேட்க ஒருவர் தெருவில் விரைந்து போய்க் கொண்டிருப்பது ஜன்னல் வழியே தெரிந்தது. அந்த இளைஞனும் திரும்ப வந்து, தூய்ஷின் போய்விட்டதாக சொன்னான்.

கூஅவர் உள்ளே வர இயலாதாம். அவரிடம் பட்டுவடா செய்யப்பட வேண்டிய தபால்கள் நிறைய இருக்கின்றதாம்கூ என்று இளைஞன் சொன்னான்.

கூஅவர் போய் பட்டுவடாச் செய்யட்டும். அவரை தடுக்காதீர்கள். எல்லாவற்றையும் கொடுத்து விட்டு வந்து கிழவர்களுடன் சேர்ந்து உட்காரட்டுமேகூ என்று ஒரு குரல் சற்று பரிவற்ற முறையிலே பேசியது கேட்டது.

கூஉனக்கு நம்முடைய தூய்ஷினை பற்றி தெரியாது, போலும் ! அவருக்கு கடமை தான் முதலில், அவருடைய வேலையை முடிக்காமல் அவர் எங்கும் நிற்க மாட்டார்கூ

கூஆமாம் அவர் ஒரு திறுசான ஆசாமி தான். யுத்தத்திற்கு பின்னர் உக்ரைன் ஆஸ்பத்திரியிலிருந்து அவர் வெளியில் வந்தார். அவர் திரும்பி வந்து ஐந்து ஆண்டுகள் தான் இருக்கும். சொந்த கிராமத்தில் சாக வேண்டும் என்கிறார் அவர். அவர் தன் வாழ்நாளில் கல்யாணம் செய்துகொள்ளவில்லை தெரியுமோ...?கூ

கூஅட பாவமே! அவர் உள்ளே வர இயலாது என்றா சொல்லி விட்டார். சரி பரவாயில்லைகூ என்று விருந்தளிப்பவர் சொன்னார். அந்த கிராமத்தில் எல்லோராலும் மதிக்கப்பட்ட ஒருவர் மதுகிண்ணத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு, கூதோழர்களே, நாமனைவரும் ஒரு காலத்தில் தூய்ஷின் பள்ளிகூடத்துக்குப் போனவர்கள் என்பது நினைவிலிருக்க கூடும். ஆனால் அத்தனை அகரவாிசை எழுத்துகளுமே தூய்ஷினுக்கே தெரியாதுகூ என்று சொன்னார். அவர் தன்னுடைய முகத்தை வேடிக்கையாகக் கோணிக்கொண்டு தலையை ஆட்டினார். அவருடைய சைகையில் கிண்டலும், ஒருவித வியப்பும் கலந்திருந்தது.

கூ ஆமாம் ! உண்மை தான்கூ என்று எல்லாக் குரல்களும் ஏககாலத்தில் பேசின. எல்லோரும் சிரித்தார்கள்.

கூஆமாம் !அப்படி தான். அந்த நாட்களில் தூய்ன் முயற்சிக்காத விசயங்கள் ஏதாவதுண்டா? நாமும் நல்ல ஆட்கள் தான். அவரை உண்மையான ஆசிரியராகவே கருதினோம்.கூ

சிரிப்பொலி அடங்கியவுடன் தலைவர் மீண்டும் மதுக்கிண்ணத்தை உயர்த்தினார்.

இந்த காலத்தில் மக்கள் எப்படியெல்லாம் வளர்ந்து விட்டார்கள் என்று பாருங்கள். அல்டினாய் சுலமனோவா இன்று நாடறிந்த கல்விமான். நாமனைவருமே உயர்நிலைப் பள்ளி வகுப்புவரை படித்திருக்கின்றோம். இது ஒன்றே நம் வாழ்க்கை எவ்வளவு மாறியிருக்கின்றது என்பதைக் காட்டுகிறது. குர்க்குரீ கிராமத்துப் பையன்களும், பெண்பிள்ளைகளும், அவர்கள் காலத்தில் சாலசிறந்த கல்விமான்களாக விளங்கட்டும். அதற்காக மது அருந்துவோம் வாருங்கள்கூ என்றார்.

எல்லோரும் குடித்துவிட்டு மகிழ்ச்சியோடு இருந்ததால் கூட்டம் ஓரே சத்தமும், எக்காளமுமாக இருந்தது. அல்டினோய் மட்டும் கலவரமடைந்தவராய்.....








இலவசக் கல்வியையும் கல்வி சுதந்திரத்தினையும் வென்றெடுப்போம் எனும் கோசத்துடன் அனைத்து பல்கலைகழக மாணவர் பேரவை கடந்த ஆனி 19ம் திகதி ஜபுர பல்கலைக்கழகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவரை பேரணியாய் செல்லும் காட்சிகள்







கல்வி மற்றும் நலன்புரி விடயங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திக்க கோரியும் மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளை தடை செய்வதற்கு எதிராகவும் ஆனி 13 ம் திகதி ஜபுர பல்கலை மாண-வர்கள் பல்கலையில் இருந்து நுகேகொட வரை நடத்திய கவனயீர்ப்பு பேரணியின் காட்சிகள்

றுகுனு பல்கலைக்கழகத்தில்



களனி பல்கலைக்கழகத்தில்



ஜயபுர பல்கலைக்கழகத்தில்



அனைத்து பல்கலைக்கழக மாணவர் பேரவையின் செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்பாட்டங்கள்

தமிழ் மாணவர் செயற்குழுவின் சார்பில் கொழும்பு கோட்டே மாதிவெல எனும் முகவரியில் வசிக்கும் பழ றிச்சர்ட் ஆகிய என்னால் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.